## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**நிதிச் சுற்றறிக்கை கடித இலஃ** 01/2019

2019 ஜனவரி 02 ஆந் திகதி

பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள்
வளாக அதிபர்கள்
நிறுவகப் பணிப்பாளர்கள்

**கணக்கு வாக்குப் பணம்-2019**
**தலைப்பு இல.214- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ)**

2019 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும் வரை, அரசாங்கத்தின் பொதுவான சேவைகளை இடையறாமல் நடாத்திச் செல்வதற்குரிய கணக்கு வாக்குப் பணத்தினை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கணக்கு வாக்குப் பணத்தினை ஊடாக செலவுக்கான அனுமதியானது வழங்கப்பட்டிருப்பது 2018 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக்கு உள்ளடங்கப்பெறும் 2019 ஆம் ஆண்டினுள் மேலும் செயற்பாட்டுக்கு வரும் நிகழ்ச்சிதித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் விடயக் குறியீடுகளுக்கு மாத்திரம் ஆகும். எனவே புதிய ஆளணியினர், புதிய வழங்கல் மற்றும் சேவைகள் , செயற்பாடுகள் மற்றும் கருத்திட்டத்திற்காக செலவினை ஏற்க வேண்டியது 2019 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலமானது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் என்பது வலியுறுத்தப்படுகிறது.

கணக்கு வாக்குப் பணச் சுருக்கம்-2019

(ரூபா.மில்லியன்)

| வகைப்பாடு / விடயத் தலைப்பு | 2018 திருத்தப்பட்ட பாதீடு 2018.11.31 வரை | 2018 நவம்பர் 30 வரையிலான உண்மைச் செலவு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்வைத்த மதிப்பீடு 2019 | கணக்கு வாக்குப் பணம் 2019 |
|---|---|---|---|---|
| மீண்டெழும் மானியங்கள் | 34,171 | 32,777 | 48,830 | 15,208 |
| மூலதன மானியங்கள் | 19,454 | 13,466 | 31,689 | 4,600 |
| மொத்தம் | **53,625** | **46,243** | **80,519** | **19,808** |

ஜனவரி -ஏப்ரில் 2019 (கணக்கு வாக்குப் பணம்) இற்காக பல்கலைக்கழகங்கள் ரீதியில் மானியங்களை ஒதுக்குதல் , மீண்டெழும் மானியங்கள் (இணைப்பு I) மற்றும் மூலதன மானியங்கள் (இணைப்பு II) இல் காட்டப்பட்டுள்ளது.

1. **வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு- கணக்கு வாக்குப் பணம் 2019**

SDG- இல 4- தரமான கல்வியை அடியொட்டி நிர்மாணிக்கப்பட்ட பிரதான கொள்கைத் துறைகள் 4 இற்கும் இணங்க, மேற்சொன்ன கால எல்லைக்காக அவர்களின் வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கு பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களிடம் வேண்டிக் கொள்ளப்படுகிறது.

- உயர் கல்விக்கான அனுமதி
- உயர்கல்வியின் தரம் மற்றும் பொருத்தப்பாடு
- முகாமைத்துவ முறைமைகளின் நிறைவுத் தன்மை
- ஆய்வு , புத்தாக்கம் மற்றும் அறிவுப் பரிமாற்றம்

கணக்கு வாக்குப் பணத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது பின்பற்றப்பட வேண்டிய மாதியானது இச் சுற்றறிக்கையின் மாதிரி I-IV இல் காட்டப்பட்டுள்ளன.

2. **மூலதன மானிய அலகு (CBG)**

நிதியினைப் பயன்படுத்திக் கொள்ளும் முன்னேற்றம் மற்றும் பல்கலைக்கழக / உயர்கல்வி நிறுவகத்திற்கான முலதனத் திட்டத்தினைக் கருத்திற் கொண்டு பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவகத்திற்கான மூலதன மானியமானது வேறாக்கப்பட்டுள்ளது.

அ) **கட்டுமானக் கருத்திட்டங்கள்**

தற்சமயம் மேற்கொள்ளப்படும் கட்டுமான கருத்திட்டத்திற்காக முன்னுரிமை அடிப்படையில் நிதியினை ஒதுக்கப்படல் வேண்டுமென்பதுடன், 2019 ஜனவரி-ஏப்ரில் காலப்பிரிவினுள் புதிய கட்டுமானக் கருத்திட்டங்களை ஆரம்பிக்கப்படக் கூடாது.

ஆ) **வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்கள்**

நிலையான வைப்புக்களின் புனர்நிர்மாணம் மற்றும் முன்னேற்றங்கள், நிலையான சொத்துக்களின் கையகப்படுத்தல், முன்னுரிமை அடிப்படையில் பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவகம் மூலம் போதுமான அளவு நிதி ஒதுக்கீடானது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இ) **நிலங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றின் கையகப்படுத்தல்**

மூலதன மானியங்களினால் நிலங்கள் மற்றும் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்குரிய நிதிகளானவை ஒதுக்கீடு செய்யப்படலாகாது. நிலங்கள் மற்றும் வாகனங்களுக்கான கொள்வனை வழங்களின் போது ஏற்கனவே உள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளைப் பின்பற்றல் வேண்டும்.

ஈ) **பட்டப்பின் / கலாநிதி நிகழ்ச்சித் திட்டங்கள்**

பல்கலைக்கழக ஊழியர்களுக்கான பட்டப்பின பட்ட / கலாநிதி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் / NCAS இனால் நிதியிடல் மேற்கொள்ளப்படுவதுடன் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் ஆனவை இந்நோக்கத்திற்காக அவர்களது மூலதன மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ள முடியாது. பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களினால் நடத்தப்படும் பட்டப்பின் பட்ட நிகழ்ச்சிகளுக்கு பட்டப்பின் பட்ட கருத்திட்டங்களின் ஊடாக உருவாக்கப்பட்ட வருமானத்தின் மூலம் நிதியுதவி செய்யப்படல் வேண்டும்.

**3. வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் தொடர்ச்சி 2016-2018**

பாதீட்டு முன்மொழிவுகள் 2016-2018 இன் மூலம் அமுலாக்கம் செய்யப்பட்ட தொடர்ச்சியான கருத்திட்டங்களுக்கு மாத்திரமே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது நிதியினை ஒதுக்குகிறது. முறையே கருத்திட்டங்களின்

செயற்றிறன் அடிப்படையில் ஜனவரி- ஏப்ரில் வரையிலான நிதி வெளியேற்றம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கருத்திற் கொள்ளப்படும்.

அ) பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களின் உருவாக்கம்-ரூபா.932 மில்லியன்

ஆ) மருத்துவ பீடம் ஸ்தாபித்தல்- இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்- ரூபா.150 மில்லியன்

இ) சர்வதேசக் கீர்த்தி மிக்க தொழில்சார் நிறுவனங்களுடன் உறுதிப்படுத்தலை ஊக்குவித்தல்- ரூபா 4.5 மில்லியன்

ஈ) பல் விஞ்ஞானம், பற்கள் தொடர்பான ஆய்வு, மற்றும் வியாபார ஆய்வுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்- கொழும்புப் பல்கலைக்கழகம்-ரூபா.70.5 மில்லியன்

உ) நவீன வசதிகளுடன் கூடிய நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையம் ஆகியவற்றை ஸ்தாபித்தல்- வவுனியா வளாகம்- ரூபா.60 மில்லியன்

<u>மேலே குறிப்பு இலக்கம் 03 இன் (அ)-(உ) வரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒதுக்கீடுகளுக்குக் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் புதிய கருத்திட்டங்களுக்கான நிதியானது வழங்கப்பட மாட்டாது</u>.

4. **ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்**

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடங்கள், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், மற்றும் களனிப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட கருத்திட்டங்களின் அமுலாக்கம் தொடர்பில் நகர்த் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலாளரினைத் தொடர்பு கொள்ளுமாறு உரிய பல்கலைக்கழகங்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. **மீண்டெழும் செலவு மானியம் (RBG)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி விதிமுறைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் ஜனவரி மாதத்துக்கான மீண்டெழும் செலவு மானியம்- ஏப்ரில் 2019 ஆனது தேசிய வரவு செலவுத் திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.**மாணவர் நிதியுதவித்திட்டம் மற்றும் மகாபொல புலமைப்பரிசிலுக்கு நிதியளித்தல்- திறைசேறிப் பங்களிப்பு**

நடைமுறையிலிருக்கும் சுற்றறிக்கைகளின் கூறப்படும் விதமாக நிதியுதவித்திட்டத்திற்கான ஈடு செய்தல் கோரிக்கையினை மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களுக்கு சமர்ப்பிக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் மகாபொல புலமைப்பரிசிலுக்கான திறைசேறிப் பங்களிப்பு நிதி வெளியேற்றம் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் / மகாபொல நம்பிக்கை நிதியத்தினால் விரைவிலே அறிவிக்கப்படும்.

இது தொடர்பில் மேலதிக தெளிவுபடுத்தல்கள் அவசியப்படின் தயவு செய்து 011-2123485 என்ற தொலைபேசி இலக்கத்தின் வாயிலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிக் கணக்காளர் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

## 7. பட்டப்பின் நிறுவகங்களுக்கான நிதிகள்

உருவாக்கப்பட்ட வருமானத்தின் ஊடக தமது வரவு செலவுத் திட்டத்திற்கு நிதியளிப்பினை மேற்கொள்ளும் படி பட்டப்பின் நிறுவகங்களுக்கு இத் தால் அறிவுறுத்தப்படுகிறது. மூலதனக் கருத்திட்ட கண்காணிப்புக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டத்தினை அடியொட்டி மூலதன மானியங்களானவை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

பட்டப்பின் நிறுவகங்களுக்கான மீண்டெழும் செலவு மானியத்தினை வேறாக்குதல் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படுவதானது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணி இட எண்ணிக்கை அடிப்படையிலாகும்.

எவ்வாறாயினும் பட்டப்பின் நிறுவகங்களானவை 2020 ஆம் ஆண்டில் சுய நிதியீட்டல் மேற்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்கான மூலோபாயத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 8. பொதுவான வழிகாட்டுதல்கள்

அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 8 (2) இன் பிரகாரம் ரூபா.500,000/- இற்கும் கூடிய மூலதனச் செலவினை எதிர்கொள்ள நேரிடும் பட்சத்தில் நிதி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் மற்றும் நிரல் அமைச்சரின் இணக்கத்தினைப் பெறல் வேண்டும். எனவே, இது தொடர்பில் நிதி அமைச்சரின்ஒப்பதலைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தமது மூலதனச் செலவு நிகழ்ச்சித்திட்டத்தினை வரவு செலவுத் திட்டத்துடன் பல்கலைக்கழக

மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆ) கட்டமைப்பு I முதல் IV இன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மென் பிரதியினை budjet@ugc.ac.lk மின்னஞ்சல் முகவரிக்கு 2019 ஜனவரி 07 அன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் படி அனுப்பி வைக்கவும்.

இ) வரவு செலவுத் திட்டத்தின் வன் பிரதியினை 2019 ஜனவரி 07 அன்று அல்லது அதற்கு முன்னர் பிரதியொன்றினை பணிப்பாளர் நாயகம், வரவு செலவுத் திணைக்களம், பொதுத் திறைசேறிக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்.

ஈ) பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் எக்காரணத்தினைக் கொண்டும் தரப்பட்டுள்ள உயர்கட்டமைப்பில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தலாகாது.

உ) இச்சுற்றறிக்கை மற்றும் அதனோடு இணைந்த சகல இணைப்புக்களையும் www.ugc.ac.lk என்ற இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஊ) இது தொடர்பில் மேலதிக தெளிவுபடுத்தல்கள் அவசியப்படின் தயவு செய்து 011-2123490 என்ற தொலைபேசி வாயிலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்காளர் அவர்களை அல்லது 011-2123490 என்ற தொலைபேசி இலக்கத்தின் வாயிலாக சிரேஷ்ட உதவிக் கணக்காளர் / வரவுசெலவு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பேராசிரியர். மொஹான் த சில்வா
தலைவர்

பிரதிகள்:

1. செயலாளர், நகர்த் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு
2. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
3. உப தலைவர், ப.மா.ஆ
4. செயலாளர், ப.மா.ஆ
5. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள் நிறுவகங்களின் அல்லது வளாகங்களின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள்
6. கணக்காளர், ப.மா.ஆ
7. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் நிறுவகங்களின் அல்லது வளாகங்களின் சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள்
8. பொறியியலாளர் / உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவு / ப.மா.ஆ
9. சிரேஷ்ட உதவிக் கணக்காளர் / ப.மா.ஆ
10. உள்ளகக் கணக்காய்வாளர் / ப.மா.ஆ
11. கணக்காய்வாளர் நாயகம்
12. அரசாங்கக் கணக்காய்வு அத்தியட்சகர்கள் / ப.மா.ஆ
13. பல்கலைக்கழகங்களின் அரசாங்கக் கணக்காய்வு அத்தியட்சகர்கள்

**இணைப்பு I**

## கணக்கு வாக்குப் பணம்-2019
## தலைப்பு-214 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
## சுருக்கம்-மீண்டெழும் மானியம்

| | பல்கலைக்கழகம் / நிறுவகம் | ஜனவரி - ஏப்ரில் 2019 ரூபா.“000 |
|---|---|---|
| 1 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 2,347,000 |
| 2 | கொழும்பு பல்கலைக்கழகம் | 1,390,000 |
| 3 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 1,340,000 |
| 4 | களனி பல்கலைக்கழகம் | 1,290,000 |
| 5 | மொறட்டுவ பல்கலைக்கழகம் | 933,000 |
| 6 | யாழ்ப்பாண பல்கலைக்கழகம்/ வவுனியா வளாகம் | 1,066,000 |
| 7 | உறுகுணை பல்கலைக்கழகம் | 1,467,000 |
| 8 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 550,000 |
| 9 | கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை | 494,000 |
| 10 | இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | 376,000 |
| 11 | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 585,000 |
| 12 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 527,000 |
| 13 | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | 480,000 |
| 14 | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 286,000 |
| 15 | கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம் | 343,000 |
| 16 | திருகோணமலை வளாகம் | 110,000 |
| 17 | மருத்துவப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 47,000 |
| 18 | விவசாயப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 20,000 |
| 19 | தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகம் | 27,000 |

| | | |
|---|---|---|
| 20 | விஞ்ஞானப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 6,000 |
| 21 | பாளி மற்றும் பௌத்தக் கற்கைகள் பட்டப்பின் படிப்பு நிறுவகம் | 20,000 |
| 22 | முகாமைத்துவப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | - |
| 23 | ஆங்கிலப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 8,000 |
| 24 | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 11,000 |
| 25 | சுதேச மருத்துவ நிறுவகம் | 170,000 |
| 26 | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உயர்கற்கைகளுக்கான தேசிய நிலையம் | 27,000 |
| 27 | கொழும்புப் பல்கலைக்கழக கணனி கற்கைகள் நிறுவகம் | 115,000 |
| 28 | கம்பஹா விக்ரமாராய்ச்சி ஆயுர்வேத நிறுவகம் | 107,000 |
| 29 | மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் | 135,000 |
| 30 | நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகம் | 6,000 |
| 31 | உயிர் இரசாயன மூலக்கூற்று உயிரியலும், உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் | 24,000 |
| 32 | சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகம் | 80,000 |
| 33 | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம் | 6,000 |
| 34 | விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள் நிறுவகம் | 15,000 |
| 35 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 800,000 |
| | மொத்தம் | 15,208,000 |

**இணைப்பு II**

**கணக்கு வாக்குப் பணம்-2019**

**தலைப்பு-214 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

**சுருக்கம்- மூலதன மானியம்**

| | **பல்கலைக்கழகம் / நிறுவகம்** | **ஜனவரி - ஏப்ரில் 2019 ரூபா.“000** |
|---|---|---|
| 1 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 275,000 |
| 2 | கொழும்பு பல்கலைக்கழகம் | 250,000 |
| 3 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 240,000 |
| 4 | களனி பல்கலைக்கழகம் | 250,000 |
| 5 | மொறட்டுவ பல்கலைக்கழகம் | 240,000 |
| 6 | யாழ்ப்பாண பல்கலைக்கழகம்/ வவுனியா வளாகம் | 270,000 |
| 7 | உறுகுணை பல்கலைக்கழகம் | 200,000 |
| 8 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 30,000 |
| 9 | கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை | 150,000 |
| 10 | இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | 120,000 |
| 11 | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 210,000 |
| 12 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 180,000 |
| 13 | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | 150,000 |
| 14 | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 135,000 |
| 15 | கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம் | 120,000 |
| 16 | திருகோணமலை வளாகம் | 135,000 |
| 17 | மருத்துவப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 128,000 |
| 18 | விவசாயப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 5,000 |

| | | |
|---|---|---|
| 19 | தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகம் | 5,000 |
| 20 | விஞ்ஞானப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 10,000 |
| 21 | பாளி மற்றும் பௌத்தக் கற்கைகள் பட்டப்பின் படிப்பு நிறுவகம் | 25,000 |
| 22 | முகாமைத்துவப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | - |
| 23 | ஆங்கிலப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | - |
| 24 | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 5,000 |
| 25 | சுதேச மருத்துவ நிறுவகம் | 12,000 |
| 26 | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உயர்கற்கைகளுக்கான தேசிய நிலையம் | 3,000 |
| 27 | கொழும்புப் பல்கலைக்கழக கணனி கற்கைகள் நிறுவகம் | 30,000 |
| 28 | கம்பஹா விக்ரமாராய்ச்சி ஆயுர்வேத நிறுவகம் | 41,000 |
| 29 | மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் | 3,000 |
| 30 | நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகம் | 500 |
| 31 | உயிர் இரசாயன மூலக்கூற்று உயிரியலும், உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் | 4,000 |
| 32 | சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகம் | 15,000 |
| 33 | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம் | 19,500 |
| 34 | விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள் நிறுவகம் | 9,500 |
| 35 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 112,500 |
| | பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடம் ஸ்தாபித்தல் | 932,000 |
| | புதிய கற்கைநெறிகளை அறிமுகம் செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் (மருத்துவ பீடம்- இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் (படிமுறை I) | 150,000 |
| | சர்வதேசக் கீர்த்தி மிக்க தொழில்சார் நிறுவனங்களுடன் தரஉறுதிப்பாட்டினை வலுப்படுத்தல் | 4,500 |

| | | |
|---|---|---|
| | பல் விஞ்ஞானம், பற்கள் தொடர்பான ஆய்வு, மற்றும் வியாபார ஆய்வுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் - கொழும்புப் பல்கலைக்கழகம் | 70,500 |
| | நவீன வசதிகளுடன் கூடிய நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையம் ஆகியவற்றினை ஸ்தாபித்தல்-வவுனியா மண்டபம் | 60,000 |
| | மொத்தம் | **4,600,000** |